**இர.தினகர்,**
இரண்டாமாண்டு முதுகலை வரலாறு,
வரலாற்று துறை,
புதுவைப் பல்கலைகழகம்.
புதுச்சேரி
**சு.பாலசுப்பிரமணி,**
இரண்டாமாண்டு முதுகலை வரலாறு,
வரலாற்று துறை,
அறிஞர் அண்ணா கலை அறிவியல் கல்லூரி.
விழுப்புரம்.

## கடம்பேரி – நீர்மேலாண்மை நோக்கில் ஒரு பார்வை

ஒரு ஆண்டில் காவிரி ஓடும் நீரின் அளவை விட ஐந்து மடங்கு தண்ணீரானது கோதாவரியாற்றின் வழியே கடலில் சென்று கடக்கிறது. அதகையே பேராற்றின் பசனப்பரப்பு வெறும் 12 இலக்க சதுர கிலோ மீட்டர் தான், ஆனால் அதில் ஐந்தில் ஒரு பங்கு நீரையே வரவாக கொண்ட காவிரியின் பாசனப்பரப்போ 13.5 இலக்கம் சதுர கிலோ மீட்டர்*. இந்த வியதகு நிலைக்கு காவிரியின் மேல் தமிழன் கொண்ட நீர் மேல்லாண்மையே காரணம். பண்டையத் தமிழினத்தின் நீர்மேல்லாண்மைக்கு கரிகாலன் கட்டியெழுப்பிய கல்லணையே பெருஞ்சான்று. அதே போல பாகூரில் பல்லவர் காலம் தொடங்கி சோழற் காலத்தில் சிறப்புற்று இன்று வரை பயன்பாட்டிலிருக்கும் பாகூர் ஏரி தமிழினத்தின் நீர்மேல்லாண்மைக்கு நல்லதொரு சான்று அப்பாகூர் ஏரியினை கொண்டு நீர்மேல்லாண்மையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

### அமைவிடம்:

இன்றைய புதுசேரி நகருக்கு தெற்கே கடலூர் செல்லும் வழியில் அமைந்துள்ள உள்ள ஊர் பாகூர். புதுச்சேரி மண்ணின் நெற்களஞ்சியமாக விளங்கும் ஊர் இவ்வூர், பாகூர் என்னும் பெயர் இவ்வூருக்கு பின்னர் மருவி வந்த பெயரேயாகும், வளமான அழகோடு இயற்கையின் எழில் மிகு வாகுடைய ஊர் என்று பொருள்ப்படும்

* இரெ. பரந்தாமன், கரிகாலனின் கல்லணை, கல்வெட்டு 100வது இதழ், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ப.8.

வகையில் இவ்வூர் **'வாகூர்'** என்றே வரலாற்றில் அழைக்கப்பட்டது. இந்த ஊருக்கு வாகூர் என்று பெயர் வரக் காரணமான இத்தகையே வளத்திற்கும், செழுமைக்கும் அடித்தளமாக விளங்குவது அவ்வூரில் அமைந்துள்ள ஏரியே ஆகும். இவ்வேரியானது பேரேரி, கடம்பேரி, சிங்கார ஏரி என்றேல்லாம் வரலாற்றில் குறிக்கப்பெற்ற வரலாற்று சிறப்புமிகுந்த ஒரு ஏரியாகும். இவ்வேரி தற்போது "பாகூர் ஏரி" என்று அழைக்கப்படுகிறது, பண்டைய தமிழர்களின் நீர் மேல்லாண்மைக்கு சான்றாக விளங்கும் இவ்வேரியின் வரலாறு மற்றும் அதன் பயன்பாட்டையும், பண்டைய நீர்மேலாண்மை பற்றி அறிய இவ்வூரின் கல்வெட்டுகள் மற்றும் சில மரபு கதைகளும் பெரிதும் நமக்கு உதவுகிறது.

**வரலாற்றில் வாகூர்:**


பாகூரின் வரலாற்றையும் கடம்பேரியின் நீர்மேல்லாண்மை மற்றும் அதற்கான அரசியல் மற்றும் பொருளாதார மூலதனத்தையும் பற்றி அறிய பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் செப்பேடும், பாகூரில் அமைந்துள்ள சிவன் கோவிலில் உள்ள கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தை சார்ந்த கல்வெட்டிகள் பெரிதும் துணை புரிகிறது.

'அருவாநாட்டுக் கிழ்வரி வாகூர் நாட்டு நாட்டார் காண்க்" என்று வரும் பல்லவன் நிருபதுங்கவர்மனின் பட்டயம் (கி.பி.858). கன்னர தேவனின் 22ஆவது ஆண்டு (கி.பி.962) கல்வெட்டும்[1]. ஆதித்த கரிகாலனின் 3ஆம் (கி.பி. 969) ஆண்டு கல்வெட்டும்[2]. முதலாம் இராசராச சோழனின் 25ஆம் ஆண்டு (கி.பி.1010) கல்வெட்டும்[3]. முதலாம் இராசேந்திர சோழனின் 17 ஆம் ஆண்டு (கி.பி. 1029) கல்வெட்டும்[4].இரண்டாம் இராசேந்திர சோழனின் 10ஆம் ஆண்டு (கி.பி. 1061) கல்வெட்டும்[5].

இவ்வூரானது பல்லவர் காலம் தொடங்கி இராட்டிடகூட கன்னர தேவன், சோழன் ஆதித்த கரிகாலன் காலம் வரை வாகூர் என்றும், முதலாம் இராசராசன், முதலாம் இராஜேந்திரன் காலங்களில் அழகிய சோழ சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டது என்பதையும், அதே நிலையில் பல்லவ மன்னனின் செப்பேடில் இரண்டு இடங்களில் 'பாகூர்' என்று வருகிறது, எனவே பாகூர் என்ற மருவிய சொல்லாட்சி அன்றே இருந்தது தெளிவு.

**ஏரியின் அமைப்பு:**

பாகூருக்கு மிக அண்மையில் வடக்கே அமைந்துள்ள பாகூர் ஏரி. பாகூர் மக்களின் நிலத்தடி நீருக்கான ஆதாரமாகவும், விவசாய நிலங்களின் பாசன ஆதாரமாகவும், கடம்ப மரம் நிறைந்திருந்த காலத்தில் பல்வேறு வகையான இனப் பறவைகள் வந்து தங்கும் சரணாலயமாகவும், மீன் பிடி போன்ற சிறு தொழிக்கும் மூலமாக விளங்கி வருவது கடம்பேரி. இவ்வேரியின் நீர் ஆதாரமாக விளங்குவது பொண்ணையாறே. பொண்ணையாற்றில் கட்டப்பட்டுள்ள சொர்ணாவூர் அணைக்கட்டிலிருந்து பங்காரு வாய்க்கால் வழியாக தான் தண்ணீர் பாகூர் ஏரியை அடைகிறது. ஏரியின் புவியியல் அமைப்பு, நிலப்பரப்பு, பாசனப் பரப்பு முதலியவற்றை கண்ணகி அவர்கள் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.




Source: பசுமை பாகூர் (வாகூர்) –இரா. கண்ணகி.

| பாகூர் ஏரி | |
|---|---|
| மொத்த நீர் பரப்பு | 6.18 சதுர கி.மீ |
| ஏரிக்கரையின் மொத்த நீளம் | 8.290 கி.மீ |
| ஏரியின் மொத்த கொள்ளளவு | 197.6 MCFT |
| பாசன பரப்பு | 384.3 ஹெக்டேர் (அ) 960 ஏக்கர் |

Source: Annexure I & II பசுமை பாகூர் (வாகூர்) – இரா. கண்ணகி, பக்.68,70.

| பங்காரு வாய்க்காலின் வழி பாசனம் பெறும் கிராமங்கள் (புதுவை மாநிலம்) | | |
|---|---|---|
| எண் | கிராமத்தின் பெயர் | பாசனப் பரப்பு (ஏக்கர்) |
| 1 | கரையாம்புத்தூர் (வண்ணானேரி) | 83.00 |
| 2 | மணமேடு | 178.00 |
| 3 | கடுவனூர் | 158.00 |
| 4 | அரங்கனூர் & சேலியமேடு | 738.00 |
| 5 | ஆதிங்கப்பட்டு | 483.00 |
| 6 | கிருமாம்பாக்கம் | 778.00 |
| 7 | பாகூர் | 993.00 |
| 8 | மணப்பட்டு & உச்சிமேடு | 468.00 |
| 9 | கீழ்பரிக்கல்பட்டு | 223.00 |
| 10 | மேல் பரிக்கல்ப்பட்டு | 98.00 |
| 11 | ஆராய்ச்சிக்குப்பம் | 63.00 |
| 12 | குருவிநத்தம் | 183.00 |
| 13 | இருளன் சந்தை | 332.00 |
| | மொத்தம் | 4778.00 |

| பங்காரு கால்வாய் | |
|---|---|
| மொத்த நீளம் | 13.194 கி.மீ |
| மொத்த பாசன வசதி பெறும் கிராமங்கள் | 19 |
| புதுவை மாநிலம் | 13 |
| தமிழகப்பகுதி | 6 |
| பாசன வசதி பெறும் மொத்த நிலப் பரப்பு | 6053.14 ஏக்கர் |
| புதுவை மாநிலம் | 4778 ஏக்கர் |
| தமிழகப்பகுதி | 1275.14 ஏக்கர் |

| பங்காரு வாய்க்காலின் வழி பாசனம் பெறும் கிராமங்கள் (தமிழக மாநிலம்) | | |
|---|---|---|
| எண் | கிராமத்தின் பெயர் | பாசனப் பரப்பு (ஏக்கர்) |
| 1 | பேரீச்சம்பாக்கம் | 85.00 |
| 2 | காளையூர் | |
| | ✓ மானோடை குளம் | |
| | ✓ திப்பாரெட்டி குளம் | 350.04 |
| | ✓ அம்மாள் ஏரி | |
| 3 | திருப்பனம்பாக்கம் | 314.49 |
| 4 | ஓட்டேரிப்பட்டு | 160.56 |
| 5 | காரைமேடு | 215.05 |
| 6 | நாகப்பனூர் | 150.00 |
| | மொத்தம் | 1275.14 |
| தமிழகம் + புதுச்சேரி பாசனப்பரப்பு (4778.00+1275.14) | | 6053.14 ஏக்கர். |

Source: Annexure I பசுமை பாகூர் (வாகூர்) – இரா. கண்ணகி, பக்.69.

**வரலாற்றில் கடம்பேரி:**

வாகூரில் உள்ள கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகள் இதன் பழைமையான பெயரையும் இதன் பராமரிப்பு குறித்தும் காட்டுகிறது. இவற்றுள் காலத்தால் முற்பட்டது கன்னர தேவனின் சாசனம், அதில் இவ்வேரியின் பெயரைக் "கடம்பேரி" என்று குறிக்கிறது. இராசராச சோழனின் கல்வெட்டு கடம்பேரி என்ற பெயரோடு 'பேரேரி' என்றும் குறிப்பிடுகிறது, ஆனால் பல்லவ அரசன் நிருப்பதுங்கனின் பாகூர்கச் செப்பேட்டில் "கடம்பேரி" பற்றி செய்தி ஏதும் காணுமாற்றமில்லை, ஆகையால் இவ்வேரி கன்னரத்தேவனின் ஆட்சிக்கு முன்பு வெட்டப்பட்டுயிருக்க வேண்டும் என்பது இதனால் தெளிவாகிறது.

**பெயர் காரணம்:**

பழங்காலம் தொட்டே கடம்பம் என்ற வகையான மரங்கள் இந்த ஏரி முழுவதும் வளர்ந்த்து என்றும், அக்கடம்ப மரங்கள் இவ்வேரிக்குள் மிகுந்திருந்த காரணத்தால் இவ்வேரி கடம்பேரி என்றும். அளவில் மிகவும் பெரியதாக விளங்கியமையால் சோழர் காலத்தில் பேரேரி என்றும் பெயர் பெற்றது. பின்னர்

பிற்காலத்தே பாங்காரி சிங்காரி என்ற இரு நாட்டிய சகோதரிகளால் வெட்டப்பட்டதாக கூறபட்டு பாங்காரு வாய்க்கால் சிங்கார ஏரி என்று பெயர் பெற்றது.

**ஊர் சபையும் ஏரி ஆயமும்:**

பாகூரில் இருந்த கலிங்கு வாரியத்தைப்பற்றிக் கன்னர தேவனின் சாசனம் ஒன்றால் அறிகிறோம். கலிங்குகளில் நீரைத் தேக்கி அவரவர்க்குரிய முறை நாட்களில் விடுவது இவர்தம் கடைமையாகும் என்று கல்வெட்டின் வழி அறிய முடிகிறது

பாகூர்ச்சிவன் கோயில் கருவரை மேற்கு புறசுவரில் பொறிக்கப்பட்டுள்ள ‘காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய கோவிராசகேசரியின் 11ஆம் ஆண்டு (நேர் ஆண்டு 14.06.996) கல்வெட்டில் உள்ள செய்தியில் ஊர் சபை கூடிய முடிவெடுத்த செய்தியை கூறுகிறது, அக்கல்வெட்டு செய்தி: ‘வாசலில் இருக்கும் மா (அ) அரச மர நிழலில் இளைஞர் முதல் முதியோர் வரை பெருமளவில் கூடியிக்க, பெருங்குறிச்சபையார் கூடிச்செய்த ஒழுங்கு முறையாவது:’ என்று சபைக் கூடிய நிகழ்வை கூறுகிறது.

பெரிய ஏரிக்கு அவ்வூரைச் சுற்றி வளைந்த்தாக அமைந்த நிலபுலங்களில் விளைகின்ற **ஒவ்வொரு போகத்துக்குக் மா ஒன்றுக்கு பதக்கு நெல்** ஏரி ஆயமாக ஏரிவாரியப் பெருமக்களால் தண்டல் செய்யவேண்டுமென்றும். அவ்வேரி ஆயத்தை கொண்டு ஒவ்வொராண்டும் மழைக்காலம் வருவதற்கு முன்னாக ஏரியில் படிந்துள்ள வண்டல் மண்மேடுகளை அகழ்ந்து ஆழமாக்கவும், கரைகளை உயர்த்தவும், மதகுகளை செப்பனிடவும் செலவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதாக அக்கல்வெட்டு கூறுகிறது.

மேலும் இவ்வாயம் வசுலிக்கும் பொறுப்பும் மற்றும் அதை கொண்டு பணிகளை செய்யும் பொறுப்பும் கிராம சபைக்குரிய தலைமை பொறுப்பு வகிக்கும் வாரிய உறுப்பினர்களினது என்றும், இஃதன்றியும் அப்பொழுது ஆட்சிசெய்யும் **அரசர் 25 கழஞ்சுபொன் ஏரி ஆயமாகத்தண்டி** தந்து ஏரியை ஆழப்படுத்தும் பணியைச் செய்யக் கடவாராக’ என்று மகாசபையாரால் முறைச் செய்யப்பட்டது என்று அக்கல்வெட்டின் வழி அறிய முடிகிறது. இவ்வாறு அரசர் 25 கழஞ்சு பொன் ஆயமாக தருவது பல்லவர் காலம் தொட்டு வருகிற வழக்கம் என்று பாகூர் குப்புசாமி என்ற வரலாற்று அறிஞர் கூறுகிறார்.

**ஏரி பராமரிப்பு பணி:**

கி.பி.1027 ஆண்டு மார்கழி திங்கள் பூர்வபட்சம் பரதிபதமும் வெள்ளிக்கிழமையும் பெற்ற பூராட்த்து நாள் அன்றிரவு அழகிய சோழன் அம்பலம் என்னுமிடத்து வாகூரின் ஊராளும் பேரவை கூடியது. 'திருமன்னி வளர...' எனத்தொடங்கும் மெய்க்கீர்த்தியை உடைய கோப்பரகேசரி பன்மரான முதல் இராஜேந்திரனின் 16 ஆம் ஆண்டு (நேர் ஆண்டு 1.1.21027) கல்வெட்டில் இச்செய்தியை பின்வருமாறு கூறுகிறது:

'இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழன் பெயரால் அமைந்த அம்பலத்தே இப்பகுதி அரசியல் அதிகாரியான திருவழுந்தூர் நாட்டுக்கப்பூருடையான் நீலன் வெண்காடனாரும் உடனிருக்கச் செய்த ஒழுங்குமுறையாவது: 'நம் ஊர் ஏரிக்கு, ஏரி ஆயமாக வெளியூரிலிருந்து வந்து இவ்வூர் நிலத்தில் நெல், வரகு, கம்பு உள்ளிட்ட பயிர் செய்தாரைப் போகங்கள் தோறும், பன்னிருசாண் 256 **குழிகொண்ட ஒரு மா நிலத்தில் ஒவ்வொரு போகத்திற்கும் எட்டு நாழி கொள்ளளவுடைய கங்கைகொண்டான் மரக்காலால் இருதூணியும் ஆண்டுதோறும் ஏரி ஆயமாகக் கொள்ளக்கடவது'**.

இஃதன்றியும், பத்து வயதுக்கு மேல் எண்பது வயதுக்கு கீழ்பட்டாரை நாற்சாண் கோலுக்கு **இருகோல் அகலமும் ஒரு கோல் மடக்கும் (ஆழமும்)** கொண்டு அவரவர் பெயரில் **ஒரு குழி** (ஒரு குழி என்பது நாற்சாண் கோலால் இரு கோலுக்கு ஒரு கோல் அகலமும் ஒரு கோல் ஆழமும் கொண்டது) ஆண்டுதோறும் மண்ணைத் தோண்டி எடுத்துக் கரைகட்ட வேண்டும். அவ்வாறு பணிசெய்ய மாட்டாதாரிடம் ஏரிவாரியஞ் செய்வாரே ஏரி ஆயமாக **காற்பொன்** அவ்வவ் ஆண்டு தோறும் தண்டப்பெறுவார்களாக. அவ்வாறு ஏரி ஆயம் செய்வார் பெயரில் கழஞ்சுபொன் ஏரி ஆயமாக கொள்ளக்கடவாராக.

இக்கல்வெட்டின் மூலம் குழி தோண்டாதவர்களுக்கு தண்டம் விதித்ததையும் அதை வசூலிக்காத பட்சத்தில் ஏரி வாரியத்தினர் ஒவ்வொருவரும் ஒரு கழஞ்சு பொன்னை தண்டமாக கட்டவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

மேலும் இவ்வூர் நிலம் வாரிசு இன்றிப்போனால், வேறொருவருக்குக் கொடுக்க வேண்டின், அவ்வாறு கொள்வாரிடம் **கழஞ்சு பொன்** தண்டப்பட வேண்டும்.

ஏரியாயமாக வந்த நெல்லில் ஏரிக்கணக்குப் பார்ப்போருக்கு **நாள்தோறும் பதக்கு நெல்** சம்பளமாகத் தரப்படவேண்டும் என்று மற்றொரு கல்வெட்டில் உள்ளது.

இந்த ஏரிக்கு சிங்கார ஏரி என பெயர் வரக்காரணமாக ஒரு மரபு நிலவுகிறது, அம்மரபுப்படி கால்வாயை வெட்டியது வங்காரி என்றும் கரையை எழுப்பியது சிங்காரி என்றும் அதனை காத்தவன் எரமுடி ஐயனார் என்றும் கூறப்பட்டது, ஆனால் இதனை ஒரு செவிவழிச் செய்தி என வரலாற்று அறிஞர் பாகூர் குப்புசாமி கூறுகிறார்.

எப்படியாயினும் பல்லவர் காலம் தொடங்கி சோழர்களின் வீழ்ச்சி வரையிலான காலக்கட்டம் தமிழகத்தில் நீர் மேலாண்மை பெரும் வளர்ச்சிப் பெற்றது என்பது சான்றுகளின் வழியே அறிய கிடைக்கிறது. இராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காவிரியின் வெள்ளத்தை தடுக்க கல்லணையை கட்டியெழுப்பிய சோழர் குடி வழி வந்தோர் இன்று சிறு மழைக்கு வீதிகளில் தஞ்சம் புகும் நிலை பெறும் அவலமே! வரலாறு படிப்பதே நம்மை நாம் தகவமைத்து கொள்ள தான், மரபாக வழி வழியே வரும் இத்தகைய பெரும் நிறுவாக மேலாண்மை கட்டமைப்பை நாம் உணராமல் கடந்து செல்வது அறியாமையின் உச்சம்.

**<u>நூற் குறிப்புகள்:</u>**


1. S.I.I., Vol. VII, No. 803 (176 of 1902)
2. பல்லவனும் பாரந்தகனும் பக்.130.
3. S.I.I., Vol. VII, No. 808 (181 of 1902)
4. S.I.I., Vol. VII, No. 801 (174 of 1902)
5. S.I.I., Vol. VII, No. 798 (171 of 1902)
6. S.I.I., Vol. VII, Nos. 760 (136 of 1902)


**<u>துணை நூட்கள்:</u>**


1. பசுமை பாகூர் (வாகூர்), இரா.கண்ணகி.
2. வரலாற்றில் வாகூர், வில்லியனூர் புலவர் ந.வேங்டேசன்.
3. புதுசேரி மரபும் மாண்பும், பாகூர்க் கடம்பேரி (கட்டுரை), புலவர் அரு. அப்பாசாமி.
4. கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள், புலவர் சு. குப்புசாமி.
5. புதுச்சேரி மாநிலக் கல்வெடுக்கள் (Pondicherry inscriptions) part – II.